செ.வெ.எண்: 30 நாள்: 19.11.2021

# மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு!!!

திருப்பூரில் உள்ள திருக்கோவில்களில் விலை மதிப்புமிக்க ஐம்பொன் சிலைகள், பொன், வெள்ளி, தங்க ஆபரணங்கள், விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் உண்டியல்கள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டி "கோவில் பாதுகாப்பு படை" என்ற தனிப்படை உள்துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.7,300 வழங்கப்படும். திடகாத்திரமான முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

தற்போது திருப்பூர் மாவட்ட எல்லைக்குள் இருக்கும் மிக முக்கிய கோவில்களில் பாதுகாப்புப் பணிக்கு 49 பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, இப்பணிக்கு செல்ல விருப்பமுள்ள திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ஐந்தாம் தளத்தில் அறை எண்.523-ல் இயங்கும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் அசல் படை விலகல் சான்று இரண்டு புகைப்படங்கள் மற்றும் அடையாள அட்டையுடன் நேரில் அணுகி எழுசிது மூலமான விருப்ப விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலக தொலைபேசி எண்.0421 - 2971127 மற்றும் மின்னஞ்சல் முகவரியினை exweltup@tn.gov.in தொடர்பு கொண்டு பயனடையுமாறு திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.